Literacy for a Billion

Movie: Dheiva Thaai
Year: 1964

Song: Moondrezhuthil
Lyricist: Vaali

மூன்றெழுத்தில்
என் மூச்சிருக்கும்
அது முடிந்த பின்னாலும்
பேச்சிருக்கும்
உள்ளம் என்றொரு
ஊர் இருக்கும்
அந்த ஊருக்குள்
எனக்கொரு பேரிருக்கும்
கடமை அது கடமை
கடமை அது கடமை
அந்த மூன்றெழுத்தில்
என் மூச்சிருக்கும்
அது முடிந்த பின்னாலும்
பேச்சிருக்கும்
உள்ளம் என்றொரு
ஊர் இருக்கும்
அந்த ஊருக்குள்
எனக்கொரு பேரிருக்கும்
பதவி வரும்போது
பணிவு வரவேண்டும்
துணிவும் வரவேண்டும்
தோழா
பாதை தவறாமல்
பண்பு குறையாமல்
பழகி வரவேண்டும்
தோழா
பதவி வரும்போது
பணிவு வரவேண்டும்
துணிவும் வரவேண்டும்
தோழா
பாதை தவறாமல்
பண்பு குறையாமல்
பழகி வரவேண்டும்
தோழா
அன்பே உன் அன்னை
அறிவே உன் தந்தை
உலகே உன் கோயில்
ஒன்றே உன் தேவன்
மூன்றெழுத்தில்
என் மூச்சிருக்கும்
அது முடிந்த பின்னாலும்
பேச்சிருக்கும்
உள்ளம் என்றொரு
ஊர் இருக்கும்
அந்த ஊருக்குள்
எனக்கொரு பேரிருக்கும்
கடமை அது கடமை
கடமை அது கடமை
வாழை மலர் போல
பூமி முகம் பார்க்கும்
கோழை குணம் மாற்று
தோழா
நாளை உயிர் போகும்
இன்று போனாலும்
கொள்கை நிறைவேற்று
தோழா
வாழை மலர் போல
பூமி முகம் பார்க்கும்
கோழை குணம் மாற்று
தோழா
நாளை உயிர் போகும்
இன்று போனாலும்
கொள்கை நிறைவேற்று
தோழா
அன்பே உன் அன்னை
அறிவே உன் தந்தை
உலகே உன் கோயில்
ஒன்றே உன் தேவன்
மூன்றெழுத்தில்
என் மூச்சிருக்கும்

அது முடிந்த பின்னாலும்
பேச்சிருக்கும்
உள்ளம் என்றொரு
ஊர் இருக்கும்

அந்த ஊருக்குள்
எனக்கொரு பேரிருக்கும்
கடமை அது கடமை
கடமை அது கடமை

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.